## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி) - 2004/05
## (ஒக்டோபர்/நவம்பர் – 2006)

# EDU 101 – கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்களும் மனிதவள அபிவிருத்தியும்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

1. தத்துவஞானிகள் கல்விக்குத் தந்த வரைவிலக்கணங்கள் சில தருக. அவற்றுள் ஒன்றை விமர்சனரீதியாக ஆராய்க.

2. சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் கல்வி எவ்வாறு ஒரு கருவியாகத் தொழிற்படுகிறது என்பதனை உதாரணங்கள் காட்டி ஆராய்க.

3. கல்வியில் விரயம் எனும் தொடர்மூலம் நீர் விளங்குவது யாது? இலங்கையின் பாடசாலை அமைப்பில் எவ்வெவ் வழிகளில் விரயம் ஏற்படுகின்றது என்பதை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் கூறுக.

4. நீர் கற்ற கல்விச் சிந்தனையாளர்களில் ஒருவரைத் தெரிவு செய்து இலங்கையின் சூழலுக்கு அவரது கல்விச் சிந்தனைகள் எவ்வளவுக்குப் பொருந்தும் என ஆராய்க.

5. முன்பள்ளிக் கல்வி தொடர்பாகச் சிந்தனையாளர்கள் இருவர் முன்வைத்த கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுக. நீர் வாழும் சூழலில் உள்ள முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கு நீர் கூறும் ஆலோசனைகள் யாவை?

6. முறைசாராக் கல்வி என்பதால் நீர் விளங்குவது யாது? வளர்ந்தோர் கல்விக்கு இம்முறையை எவ்வாறு பயன்படுத்தலாம்? உமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் முறைசாராக் கல்விச் செயற்திட்டங்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் கூறுக.

7. இலங்கையில் சிறுவர் உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையிட்டு ஆராய்க.

8. ஆசிரியத் தொழில் ஒரு உயரிய தொழிலாகும். உயரிய தொழில் என்பதால் நீர் விளங்குவது யாது? ஒரு ஆசிரியரிடம் இருக்கக் கூடிய உயர் தொழிற்பண்புகளை ஆராய்க.